**<u>இ.ம.எண்.2/2023</u>**
**<u>உள்</u>**
**<u>அ.வ.எண்.72/2023</u>**
**<u>தேதி. 8.12.2023</u>**

**உத்தரவு**

இம்மனுவானது நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தை பரிசீலித்து அசல் வழக்கினை பார்வையிடும்போது அசல் வழக்கானது விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், பிரதிவாதிகள் வாதிக்கு பாத்தியப்பட்ட 2ம் தபசில் சொத்துடன் இணைத்து கடந்த 2020ம் வருடம் செப்டம்பர் மாதம் 25ம் தேதி புதிதாக சாமி பீடம் அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். மேற்படி 2ம் தபசில் சொத்தில் பிரதிவாதிகளுக்கு யாதொரு உரிமையும், உரிமைமூலமும் கிடையாது. எனவே, மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா சொத்துக்களை அளந்து ஆக்கிரமிப்புகளை கண்டறிவது அவசியமானது என்பதால் மேலே கண்ட பரிகாரம் கோரி இம்மனு தாக்கல்.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்த வழக்கில் எதிருரை தாக்கல் செய்திருந்தாலும்கூட மனுவினை அனுமதிக்க எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்து அதனை உறுதி செய்து மனுவில் மேலொப்பம் செய்துள்ளார்.

மனு மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் மேலொப்பம் ஆகியவற்றை பரிசீலித்து அசல் வழக்கினை பார்வையிடும்போது அசல் வழக்கானது விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வாதிகள் சொல்லியதுபோல் தாவா 2ம் தபசில் சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்படி சங்கதியை தீர்மானிக்க இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் அவசியமானது என்பதால் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

அதன்படி, வழக்கறிஞர் திரு.S.ஆறுமுகநயினார், J/o S.விஜய் பால்பிராங்கிளின் என்பவரை ஆணையராக நியமனம் செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மேற்படி ஆணையருக்கு ஊதியமாக ரூ.4000/– நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி தொகையை வரும் 18.12.2023ம் தேதிக்குள் மேற்படி வழக்கறிஞர் ஆணையரிடம் மனுதாரர் நேரடியாக செலுத்தி அதற்கான குறிப்பாணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்பட்சத்தில் வழக்கறிஞருக்கான வாரண்ட் வழங்கப்படும் என்றும், அவ்வாறு வாரண்ட் வழங்கப்பட்டால் வழக்கறிஞர் ஆணையர் கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி செயல்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

**<u>ஆணையருக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்கள்</u>**

**அ.** நீதிமன்ற ஆணையர் இருதரப்பு வழக்கறிஞர்களுக்கோ அல்லது வழக்கின் தரப்பினர்களுக்கோ முன்கூட்டியே தாவா இடத்தை பார்வையிடுவது சம்மந்தமாக எழுத்துப்பூர்வ அறிவிப்பு கொடுத்து, தாவா சொத்தினை சர்வேயர் உதவியுடன் அளந்து ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டும்.

**ஆ.** நீதிமன்ற ஆணையர் வழக்கறிஞர்களுக்கோ அல்லது தரப்பினர்களுக்கோ அறிவிப்பு கொடுக்கும்போது அதை யாரேனும் பெற மறுத்துவிட்டாலோ அல்லது நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை பார்வையிட நிர்ணயித்த தேதியை மாற்ற கோரினாலோ அதுகுறித்த தகவலை இந்நீதிமன்றத்திற்கு குறிப்பாணை மூலம் தெரிவிக்கவேண்டும்.

**இ.** நீதிமன்ற ஆணையர் முன்னறிவிப்பு கொடுப்பதை தரப்பினர்களோ அல்லது வழக்கறிஞர்களோ பெற்றுக்கொள்ள மறுக்கும்பட்சத்தில் அவர்களுக்கான முன்னறிவிப்பை தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். அதற்காகும் செலவை நீதிமன்றத்தில் தெரிவித்து மனுதாரரிடமிருந்து வசூல் செய்ய நடவடிக்கை கோரி குறிப்பாணை தாக்கல் செய்ய வேண்டும்.

**ஈ.** இருதரப்பு வழக்கறிஞர்கள் நீதிமன்ற ஆணையருக்கு அறிவுறுத்தல் குறிப்பாணை வழங்கும்பட்சத்தில் (Memo of instruction) அதனை பெற்றுக்கொண்டு பணியை நிறைவேற்ற வேண்டும்.

**உ.** நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை இருதரப்பினர்கள் முன்னிலையிலோ அல்லது இருதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையிலோ பார்வையிட்டு வருவாய் ஆவணங்கள் மற்றும் இருதரப்பினர்களின் உரிமைமூல ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தினை அளந்து அத்து நிர்ணயம் செய்து ஆக்கிரமிப்புகள் எதுவும் இருந்தால் அதனை தெளிவாக குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். வருவாய் மற்றும் உரிமைமூல ஆவணங்களின்படி தாவா சொத்தினை அளக்கும்போது ஒவ்வொரு ஆவணத்தின் அடிப்படையிலும் அளக்கும்போது ஏதேனும் அளவு மாறுபாடு உள்ளதா



என்பதையும் தெளிவாக அறிக்கையில் குறிப்பிட வேண்டும். மேலும், வருவாய் ஆவணத்தின்படியும், உரிமைமூல ஆவணத்தின்படியும் அளந்து தனித்தனியாக வரைபடத்தை தாக்கல் செய்ய வேண்டும்.

**ஊ.** நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை அளவீடு செய்யும்போது தாவா சொத்தினையும், ஆக்கிரமிப்பு பகுதிகளையும் தெளிவாக அடையாளம் காட்டும் வகையில் புகைப்படம் எடுத்து அதனையும், தனது அறிக்கையுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

**எ.** நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை பார்வையிட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்வதில் ஏதேனும் இடர்பாடு இருக்கும் பட்சத்தில் அதுகுறித்த தகவலை நீதிமன்றத்திற்கு குறிப்பாணை மூலம் தெரிவிக்க வேண்டும்.

**ஏ.** நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்வது சம்மந்தமாக அறிவிப்பு கொடுத்த பிறகு தரப்பினர்களோ அல்லது இருதரப்பு வழக்கறிஞர்களோ எழுத்து பூர்வமாக முன்கூட்டியே காரணம் ஏதும் தெரிவிக்காமல் இருந்தால் மேற்படியார்களின் தவறுகையிருந்தாலும், ஆணையர் தாவா சொத்தின் மீதான தனது பணியை நிறைவேற்றலாம். அது குறித்து பின்னிட்டு தரப்பினர்கள் யாதொரு ஆட்சேபனையும் எழுப்ப முடியாது.

**ஐ.** நீதிமன்ற ஆணையர் தன்னுடைய பணியை விரைந்து முடித்து ஆணையர் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாத பட்சத்தில் அதற்கான காரணத்தை குறிப்பாணை மூலம் இந்நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும். அதேபோல் நீதிமன்ற ஆணையர் தனது பணியை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தால்

அதனைப்பற்றி மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் குறிப்பாணை மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அழைக்க –18.12.2023**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P KUMAR Digitally signed by P KUMAR Date: 2023.12.08 17:35:39 +0545

கூ.மா.நீ.ம

அம்பை.